# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

M மதுரை (மா) **பதினொன்றாம் வகுப்பு** பதிவு எண் : | | | | | |

*நேரம்: 2.30 மணி* **கணக்குப்பதிவியல்** *மதிப்பெண்கள்: 90*

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 20 x 1 = 20

1. பொருளை உற்பத்தி செய்ய அல்லது பண்டங்கள், பணியினை விற்பனை செய்யும் நிலைக்கு கொண்டு வர ஆகும் தொகை a) செலவு b) வருவாய் c) ஆதாயம்
2. வியாபார நிறுவனம் பிற நபர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிதி அல்லது கடன்
   a) செலவு b) பொறுப்பு c) சொத்து
3. குறிப்பிட்ட கணக்காண்டின் அடக்கவிலை வருவாயோடு ஒப்புநோக்குவது
   a) பொருத்துகைக் கருத்து b) புராதன அடக்கவிலை கருத்து c) முழு வெளிப்பாட்டுக் கருத்து
4. இந்தியாவில் இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம், கணக்கியல் தரக்குழுவை எந்த ஆண்டு அமைத்தது?
   a) 1978 b) 1977 c) 1976
5. முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு முனைமம் க/கு
   a) தனிநபர் க/கு b) சட்டமுறை அமைப்புகள் க/கு c) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு
6. கணக்கியல் சமன்பாட்டு அணுகுமுறை ______ அணுகுமுறை என்று அழைக்கப்படுகிறது.
   a) அமெரிக்க b) பிரிட்டிஷ் c) ரஷ்ய
7. முருகன் என்வரிடம் இயந்திரம் வாங்கியதற்கு வரவு வைக்க வேண்டிய கணக்கு
   a) ரொக்க க/கு b) முருகன் க/கு c) இயந்திர க/கு
8. நடவடிக்கைகள் தோற்றம் பெறுவது
   a) குறிப்பேடு b) கணக்கியல் சமன்பாடு c) ஆதார ஆவணங்கள்
9. ஆள்சார் கணக்குகளும், சொத்துக் கணக்குகளும்
   a) முடிக்கப்படுகின்றன b) இருப்புக் கட்டப்படுகின்றன c) முடிக்கப்பட்டு மாற்றப்படுகின்றன
10. கணக்கை இருப்பு கட்டும் பொழுது இருப்பு கட்டும் நாளில் ______ என எழுதப்படுகின்றது.
    a) இருப்பு கீ/கொ b) இருப்பு கீ/கி c) இருப்பு மு/தூ
11. மாற்றுச்சீட்டுக்கான தொகை தவணை நாளன்று செலுத்தப்படாமலிருந்தால், மாற்றுச்சீட்டு ______ எனப்படுகிறது.
    a) புதுப்பித்தல் b) ஓய்வுபடுத்தல் c) அவமதிக்கப்படுதல்
12. மார்ச் 1, 2012 அன்று சில்லறைக் காசாளரிடம் ரூ.1000 தரப்பட்டது. மார்ச் மாதம் அவர் ரூ.945 செலவழித்தார். ஏப்ரல் 1 அன்று அவர் பெறும் முன்பண மீட்புக்காக பெறும் காசோலையின் தொகை ரூ.______
    a) 1,000 b) 945 c) 1,945
13. வண்டிச்சத்தம், லாரிச்சத்தம் போன்ற செலவுகள் பதிவு செய்யப்படும் பத்தி யாது?
    a) பயணச் செலவு b) ஏற்றிச்செல் செலவு c) அலுவலகச் செலவு
14. மேல்வரைப் பற்றிருப்பு என்பது ______ ஏட்டின்படி வரவு இருப்பினைக் குறிக்கிறது.
    a) செல்லேடு b) ரொக்க c) இரண்டு ஏட்டின்
15. அலுவலகத் தட்டச்சுப் பொறியைச் சீர்செய்ய செலவிட்ட தொகை பற்று வைக்க வேண்டியது
    a) சில்லறை செலவு க/கு b) தட்டச்சுப் பொறி க/கு c) பழுதுபார்ப்புக் க/கு
16. தொழிலில் கிடைக்கப்பெற்ற நிகர நட்டம் ஒரு
    a) வருவாயின நட்டம் b) முதலின நட்டம் c) இரண்டுமில்லை
17. முப்பத்தி ரொக்க ஏட்டில், பெறப்பட்ட காசோலையின் தொகை ______ பத்தியில் பதியப்படும்.
    a) வங்கி b) ரொக்க c) இரண்டு பத்தியிலும்
18. நாம் வழங்கிய காசோலை அவமதிக்கப்பட்டால், வரவு செய்யப்படும் க/கு
    a) சரக்கீந்தோர் க/கு b) வாடிக்கையாளர் க/கு c) வங்கி க/கு
19. நிலைச் சொத்துக்கள் ______ கொண்டது. a) குறுகிய வாழ்நாள் b) நீண்ட வாழ்நாள் c) வாழ்நாள் இன்மை
20. வாராகடன் ஒரு ______ செலவாகும். a) நேரடி b) கொள்முதல் c) விற்பனை

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. ரொக்க ஏடு காட்டும் இருப்பும், செல்லேடு காட்டும் இருப்பும் வேறுபட்டு இருப்பதற்கான காரணங்கள் ஏதேனும் 2 தருக.
22. கணக்கு ஏடு பராமரிப்பின் வரைவிலக்கணம் தருக.
23. அடிப்படைக் கணக்கியல் கருத்துக்கள் ஏதேனும் 4 தருக.
24. பின்வரும் இனங்களை சொத்து, ஆள்சார் மற்றும் பெயரளவு கணக்குகளாக வகைப்படுத்துக.
    i) இந்தியன் வங்கி ii) முதல் iii) விற்பனை iv) மின் கட்டணம்
25. கீழ்க்கண்டவைகளுக்கு ஏதேனும் ஒரு தொகையுடன் நடவடிக்கைகளைத் தருக.
    i) சொத்துக்களின் மதிப்பு அதிகரித்தல் மற்றும் குறைதல்
    ii) சொத்துகள் மற்றும் முதலின மதிப்பு குறைதல்
26. செலுத்தற்குரிய நாளைக் கணக்கிடுக.

| *மாற்றுச் சீட்டின் தேதி* | *தவணைக்காலம்* |
|---|---|
| மே 12 | 3 மாதங்கள் |
| நவம்பர் 22 | 1 மாதம் |

27. கீழ்க்காணும் பிழைகளைத் திருத்துக:
    i) கொள்முதல் ஏடு ரூ.3,750 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
    ii) விற்பனை ஏடு ரூ.1,175 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
    iii) விற்பனை திருப்ப ஏடு ரூ.325 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
    iv) கொள்முதல் திருப்ப ஏடு ரூ.100 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
28. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 31 மார்ச் 2012ற்கான வியாபார கணக்கு தயார் செய்க.

| | | |
|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | ரூ | 12,500 |
| கொள்முதல் | ரூ | 93,750 |
| விற்பனை | ரூ | 1,36,750 |

இறுதி சரக்கிருப்பு ரூ.22,250 என கணக்கிடப்பட்டுள்ளது.

29. விடுதாள் பேரேடு என்றால் என்ன?

30. எதிர்பதிவு என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. பின்வருவனவற்றைக் கொண்டு திருமதி.பார்வதி அவர்களின் 2015 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கினை தயார் செய்க.

| | | |
|---|---|---|
| மொத்த இலாபம் | ரூ. | 39,000 |
| கூலி மற்றும் சம்பளம் | ரூ. | 12,000 |
| சம்பளம் மற்றும் கூலி | ரூ. | 18,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | ரூ. | 4,000 |
| வெளி ஏற்றிச்செல் செலவு | ரூ. | 6,000 |
| அளித்த தள்ளுபடி | ரூ. | 900 |
| பெற்ற தள்ளுபடி | ரூ. | 600 |
| தேய்மானம் | ரூ. | 3,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. | 20,000 |
| பெற்ற கடன் | ரூ. | 9,000 |
| வியாபாரச் செலவுகள் | ரூ. | 1,000 |
| அலுவலகச் செலவுகள் | ரூ. | 600 |

32. குறிப்பேட்டில் கீழ்க்கண்ட தொடக்கப் பதிவினைப் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| அறைகலன் | ரூ. | 30,000 |
| ரொக்கம் | ரூ. | 1,70,000 |
| கடனீந்தோர் | ரூ. | 2,80,000 |
| கடனாளிகள் | ரூ. | 2,20,000 |
| இயந்திரம் | ரூ. | 1,10,000 |

33. திரு.ராம் அவர்களின் கொள்முதல் ஏட்டை மட்டும் தயார் செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2016 ஜூன் | 10 | சீதாவிடம் வாங்கிய சரக்கு | 20,000 |
| | 14 | பழைய கணிப்பொறியை விக்னேஷிடம் வாங்கியது | 17,500 |
| | 21 | சரவணனிடம் ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 22,500 |
| | 24 | இராமன் நமக்கு சரக்கு விற்றது | 12,000 |
| | 27 | சீதாவிற்கு திருப்பிய சரக்கு | 2,000 |
| | 30 | பார்த்திபனிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 18,000 |
| | 31 | பார்த்திபனுக்கு திருப்பிய சரக்கு | 1,000 |

34. பின்வரும் நடவடிக்கைகளை திருமதி.மகாலெட்சுமியின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2011 ஆகஸ்ட் | 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| | 3 | வங்கியில் செலுத்தியது | 10,000 |
| | 5 | சரக்கு வாங்கியது | 5,000 |
| | 7 | மணிக்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 10 | அச்சுக்கட்டணம் | 1,000 |
| | 12 | பங்காதாயம் | 3,000 |
| | 15 | சின்னத்தம்பியிடம் இயந்திரம் வாங்கியது | 15,000 |

35. 2004 மார்ச் 31 ல் பேஷன் உலகத்தின் ரொக்க ஏடு ரூ.1500 வங்கி ரொக்க இருப்பைக் காட்டிற்று. (i) ஆனால் அந்நாளில் வங்கியில் பணம் பெற முன்னிலைப்படுத்தப்படாத காசோலைகள் ரூ.185, ரூ.175 மற்றும் ரூ.100 ஆகும். மற்றும் (ii) ரூ.410 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் செலுத்தியும் பணமாக்கப்படவில்லை. அந்நாளில் செல்லேட்டின் படியான இருப்பைக் கணக்கிடுக.

36. பின்வரும் பிழைகளைத் திருத்துக.
    i) காசாளர் திரு.கோவிந்தன் அவர்களுக்கு ஊதியம் வழங்கியது ரூ.12,000 அவர் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
    ii) பழுதுபார்ப்புச் செலவு ரூ.5,000, கட்டடக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
    iii) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ.87,800, ரூ.78,800 என தவறாக மொத்தமிடப்பட்டுள்ளது.

37. கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு உரிய குறிப்பேட்டுப் பதிவை தருக.

| | | |
|---|---|---|
| 2014 மார்ச் | 12 | பெருமாளுக்கு ரூ.29,500 செலுத்தி தீர்த்துக்கொள்ளப்பட்ட கணக்கு ரூ.30,000 |
| | 17 | மகேஸ்வரி என்பவரிடமிருந்து காசோலை பெற்றது ரூ.25,000 |

38. கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?

39. குறிப்பேட்டினை, பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 3)

40. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. 2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய திரு.ஈஸ்வரன் அவர்களின் ஏடுகளிலிருந்து வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| | | |
|---|---|---|
| சரக்கிருப்பு (31.3.03) | ரூ. | 15,000 |
| கொள்முதல் | ரூ. | 1,65,000 |
| அஞ்சல் செலவு | ரூ. | 3,000 |
| உள்திருப்பம் | ரூ. | 10,000 |
| வெளித்திருப்பம் | ரூ. | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | ரூ. | 5,000 |
| வாராகடன் | ரூ. | 1,000 |
| விற்பனை | ரூ. | 3,00,000 |

| | | |
|---|---|---|
| கூலி | ரூ. | 30,000 |
| வெளி ஏற்றிச்செல் செலவு | ரூ. | 4,000 |
| சம்பளம் | ரூ. | 20,000 |
| எழுதுபொருட்கள் | ரூ. | 2,000 |
| வட்டி | ரூ. | 8,000 |
| காப்பீடு | ரூ. | 4,000 |
| வங்கி ரொக்கம் | ரூ. | 12,000 |
| முதல் | ரூ. | 5,00,000 |

இறுதிச் சரக்கிருப்பு ரூ.80,000 என கணக்கிடப்பட்டுள்ளது.

*(அல்லது)*

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ரொக்கம், வங்கி, தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2015 ஜனவரி | 1 | ரொக்க இருப்பு | ரூ. | 75,000 |
| | | வங்கி இருப்பு | ரூ. | 45,000 |
| | 3 | வங்கியில் செலுத்தியது | ரூ. | 60,000 |
| | 4 | அறைகலன் வாங்கி காசோலை விடுத்தது | ரூ. | 7,500 |
| | 5 | பழுதுபார்ப்புச் செலவு | ரூ. | 650 |
| | 6 | காசோலை விடுத்து சரக்கு வாங்கியது | ரூ. | 12,500 |
| | 10 | சூரியனிடம் பெற்ற காசோலை | ரூ. | 21,000 |
| | | தள்ளுபடி அனுமதித்தது | ரூ. | 200 |
| | 12 | சந்திரனுக்கு வழங்கிய காசோலை | ரூ. | 11,500 |
| | | தள்ளுபடி பெற்றது | ரூ. | 150 |
| | 15 | தீனா நமது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தியது | ரூ. | 15,000 |
| | 21 | அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்தது | ரூ. | 2,500 |
| | 28 | சொந்த தேவைக்கு வங்கியில் இருந்து பணம் எடுத்தது | ரூ. | 500 |

42. திரு.முருகன் அவர்களின் ஏடுகளில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2000 பிப்ரவரி | 1 | முருகன் தொழில் தொடங்க முதலீடு செய்தது | ரூ. | 5,00,000 |
| | 5 | சரவணனிடம் கொள்முதல் செய்தது | ரூ. | 50,000 |
| | 9 | அலுவலகச் செலவுகளுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | ரூ. | 15,000 |
| | 12 | இயந்திரம் விற்றது | ரூ. | 7,000 |
| | 18 | கணேஷனுக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ. | 12,000 |
| | 21 | முருகன் தன் தேவைக்காக சரக்கு எடுத்தது | ரூ. | 5,000 |
| | 24 | ஊதியம் வழங்கியது | ரூ. | 10,000 |
| | | வாடகை செலுத்தியது | ரூ. | 5,000 |

*(அல்லது)*

31.12.2003 ற்கான கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து திரு.கௌதம் அவர்களின் வங்கி சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | ரூ. | 12,500 |
| ii) | அளித்த காசோலைகளில் இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதவை | ரூ. | 900 |
| iii) | வங்கியில் செலுத்திய காசோலைகளில் வசூலித்து வரவு வைக்கப்படாதவை | ரூ. | 1,200 |
| iv) | வங்கி செலுத்திய காப்பீட்டுக் கட்டணம் | ரூ. | 500 |
| v) | வாடிக்கையாளர் நேரடியாக வங்கிக்கு செலுத்தியது | ரூ. | 800 |
| vi) | வங்கி வசூலித்த முதலீடு மீதான வட்டி | ரூ. | 200 |
| vii) | வங்கிக் கட்டணம் | ரூ. | 100 |

43. கீழ்க்காணும் நடவடிக்கைகளை உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| | | | ரூ |
|---|---|---|---|
| 2012 ஏப்ரல் | 11 | பலராமனிடமிருந்து சரக்கு வாங்கியது | 12,000 |
| | 15 | செந்திலுக்கு சரக்கு விற்றது | 10,000 |
| | 17 | குமாரிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 22,000 |
| | 18 | துரையிடம் சரக்கு வாங்கியது | 11,000 |
| | 19 | சரவணனுக்கு சரக்கு விற்றது | 7,000 |
| | 21 | சங்கருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 5,000 |
| | 22 | பிரதீபிடமிருந்து சரக்கு வாங்கியது | 6,000 |
| | 24 | பார்த்திபனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 3,000 |
| | 27 | சுகுமாருக்குச் சரக்கு விற்றது | 8,000 |
| | 30 | பழைய இயந்திரத்தை மதனுக்கு விற்றது | 6,000 |

*(அல்லது)*

கீழ்க்காணும் பிழைகளின் திருத்தத்துக்கு குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

i) பாரதியிடமிருந்து சரக்கு வாங்கியது ரூ.25,000, தவறுதலாக விற்பனை ஏட்டில் பதியப்பட்டுள்ளது.
ii) பிரியாவுக்கு கடனாக விற்ற சரக்கு ரூ.30,000, தவறுதலாக கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது.
iii) அறைகலன் விற்றது ரூ 10,000, விற்பனை ஏட்டில் பதியப்பட்டுள்ளது.
iv) கட்டடம் கட்ட கூலி கொடுத்தது ரூ 2,00,000, கூலி கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
v) இயந்திரம் பொருத்த கூலி கொடுத்தது ரூ 10,000, கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

44. திரு.சண்முகம் அவர்களின் பேரேட்டில் நேரடியாகப் பதிவு செய்து இருப்பு கட்டுக.

| | | | ரூ |
|---|---|---|---|
| 2011 செப். | 6 | ஆறுமுகத்துக்கு கடன் விற்பனை செய்தது | 17,500 |
| | 9 | செல்லப்பன் அவர்களிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 22,500 |
| | 12 | பயணச் செலவுகள் செய்தது | 2,500 |
| | 15 | சிவக்குமாரிடமிருந்து கடன் பெற்றது | 80,000 |
| | 16 | வேலையாள்களுக்கு கூலி கொடுத்தது | 5,000 |

*(அல்லது)*

திருமதி.மீனாட்சி அவர்களின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டினை கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு தயார் செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 டிசம்பர் | 1 | கை ரொக்கம் | ரூ. | 435 |
| | 1 | காசாளரிடமிருந்து பெற்றது | ரூ. | 1065 |
| | 4 | அஞ்சல் தலைகள் வாங்கியது | ரூ. | 75 |
| | 7 | எழுதுபொருட்கள் வாங்கியது | ரூ. | 135 |
| | 9 | மணிமாறனுக்கு கொடுத்தது | ரூ. | 475 |
| | 13 | விற்பனை முகவர்களுக்கு கொடுத்த தேநீர் | ரூ. | 25 |
| | 20 | மை, வெள்ளைத்தாள் வாங்கியது | ரூ. | 43 |
| | 21 | ஏற்றிச்செல் செலவு | ரூ. | 45 |
| | 24 | மதுரைக்கு அனுப்பிய தந்தி | ரூ. | 25 |
| | 26 | எழுதுபொருள் வாங்கியது | ரூ. | 120 |
| | 29 | பதிவு அஞ்சலுக்கு செலுத்தியது | ரூ. | 50 |

45. கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| i) | புவனேஸ்வரி தொழில் தொடங்க முதல் போட்டது | ரூ. | 25,000 |
| ii) | சோபனாவிடமிருந்து சரக்கு வாங்கியது | ரூ. | 20,000 |
| iii) | அமலா ரூ.18,000 அடக்கவிலை கொண்ட சரக்கு விற்றது | ரூ. | 25,000 |
| iv) | புவனேஸ்வரி தொழிலிருந்து எடுத்தது | ரூ. | 5,000 |

*(அல்லது)*

திரு.வேல்முருகன் அவர்களின் ஏடுகளில் கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு, 31.3.2016 ஆம் நாளன்றைய இருப்பாய்வைத் தயாரிக்க.

| | | |
|---|---|---|
| முதல் | ரூ. | 3,30,000 |
| பொதுச் செலவுகள் | ரூ. | 26,000 |
| எடுப்புகள் | ரூ. | 96,000 |
| கட்டிடம் | ரூ. | 2,45,000 |
| சரக்கிருப்பு | ரூ. | 1,70,000 |
| காப்பீடு | ரூ. | 15,000 |
| வாராக்கடன் | ரூ. | 3,000 |
| செலுத்தற்குரிய மாற்சீட்டு | ரூ. | 85,000 |
| காப்பு நிதி | ரூ. | 1,00,000 |
| கைவச ரொக்கம் | ரூ. | 25,000 |
| கடனீந்தோர் | ரூ. | 70,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | ரூ. | 5,000 |
| கடன் (வரவு) | ரூ. | 60,000 |
| சிருந்து | ரூ. | 70,000 |

46. கீழ்க்காணும் நடவடிக்கைகளை திரு.வேலனின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 ஜனவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | ரூ. | 60,000 |
| | 5 | கந்தனுக்கு சரக்கு விற்றது | ரூ. | 10,000 |
| | 7 | வங்கியில் நடப்பு க/கு தொடங்கியது | ரூ. | 15,000 |
| | 10 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | ரூ. | 3,000 |
| | 12 | அருளிடமிருந்து பெற்ற காசோலை | ரூ. | 6,450 |
| | | தள்ளுபடி அளித்தது | ரூ. | 50 |
| | 15 | கந்தனிடம் 1% ரொக்க தள்ளுபடி கழித்து மீதி தொகையை பெற்றது | | |
| | 18 | பெருமாளுக்கு 10,350 செலுத்தி தீர்த்துக்கொள்ளப்பட்ட சரக்கு ரூ.10,500 | | |

*(அல்லது)*

திரு.இராஜ் என்பவர் 2010 ஆம் ஆண்டு தன் தொழிலில் செலவிடப்பட்ட செலவுகளைத் தருகிறார். அவை எவ்வகைச் செலவினத்தைச் சார்ந்தது எனக் குறிப்பிடுக.

i) அரசாணைப்படி மழைநீர் சேகரிப்பு அமைப்பு செய்ய செலவு ரூ.5,000
ii) இயந்திரத்தின் பழுதடைந்த பகுதியை மாற்றுவதற்காக செலவு செய்தது ரூ.1,300
iii) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ரூ.600
iv) கட்டடத்திற்கு தீக்காப்பீடு செய்தது ரூ.1,000
v) விற்பனையைப் பெருக்குவதற்காக விற்பனை மேலாளர் ஜப்பான் சென்றுவர பயணச் செலவு செய்தது ரூ.1,00,000

47. பின்வரும் விவரங்களிலிருந்து திருமதி.ஜெயப்பிரியா அவர்களின் இருப்புநிலைக்குறிப்பினை 2015 டிசம்பர் 31 ஆம் நாளன்று தயாரிக்க.

| | | |
|---|---|---|
| நற்பெயர் | ரூ. | 20,000 |
| முதல் | ரூ. | 60,000 |
| கடனாளிகள் | ரூ. | 27,650 |
| கடனீந்தோர் | ரூ. | 31,500 |
| முதலீடுகள் | ரூ. | 15,000 |
| நிகர லாபம் | ரூ. | 45,000 |
| பெறுதற்குரிய மாற்றுசீட்டு | ரூ. | 15,350 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. | 6,500 |
| எடுப்பு | ரூ. | 20,000 |
| இறுதி சரக்கிருப்பு | ரூ. | 40,000 |
| வருமான வரி | ரூ. | 5,000 |

*(அல்லது)*

வியாபார தள்ளுபடிக்கும், ரொக்க தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினை தருக.